FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364155

1. District : Namakkal PS: V & AC Year: 2026 FIR No.: 07/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 04.07.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a), 13(1)(a)
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106(1)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 03-07-2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1600hrs Time to : 2330hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 1445hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol - II Time : 1515 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.07.2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer type written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 35 kms North west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : Tiruchencode Municipality office
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Ragunathan (b) Father's/ Husband's Name : Tr. J. Ramaraj
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age-48 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ICO (g) Address : Inspection cell office, Salem, Dharmapuri
தொழில் Deputy Collector முகவரி Namakkal & Krishnagiri Districts, Collectorate, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) G. Subalakshmi, Junior Assistant/Cashier i/c, Tiruchencode Municipality
2) R. Roja, Data Entry operator, Tiruchencode Municipality
3) D. Govindarajan, Revenue Assistant, Tiruchencode Municipality.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் Namakkal District.

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/7/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Tw 04/07/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 04.07.2026 1600hrs

Name: பெயர் S.PRABHU
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
V&AC, Namakkal.

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/AC/2026, u/s. 7(a), 13(1) (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 106(1) Bharathiya Nagarik Suraksha Sanhita-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி....

இன்று 04.07.2026-ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 14.45 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது, திரு.R. ரகுநாதன், த/பெ. ராமராஜ், ஆய்வுக்குழு அலுவலர் / துணை ஆட்சியர், சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரினை பெற்று, பரிசீலனை செய்து, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் சென்னையிலிருந்து பெறப்பட்ட வாய்மொழி உத்தரவின்படி இன்று 04.07.2026-ஆம் தேதி பிற்பகல் 15.15 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். மேற்படி புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.R.ரகுநாதன், த/பெ. ராமராஜ், ஆய்வுக்குழு அலுவலர் / துணை ஆட்சியர்,சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல். ஐயா, பொருள்: திடீர் தணிக்கை - நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் 03.07.2026-ஆம் தேதி மாலை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் ஒப்படைத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை: ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியரகம், சேலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், நாள்: 03.07.2026. நான் சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வீட்டுவரி, தொழில்வரி, சொத்துவரி வசூலித்தல், புதிய வீடுகள் மற்றும் புதிய வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், அலுவலக பணியாளர்கள் மூலமாகவும் 03.07.2026-ம் தேதி அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த

தகவலின் அடிப்படையில் 03.07.2026-ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு நான் மற்றும் நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.பிரபு மற்றும் அரசு சாட்சி திருமதி.K.விஜயா, மண்டல துணை வட்டாட்சியர் எண்-1, வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் வட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் இணைந்து திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தணிக்கையின் போது திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் தணிக்கை பிரிவு அலுவலக அறைகளில் உள்ள அலுவலர்கள் அனைவரையும் அவரவர் இருக்கும் இருக்கையிலேயே அமரச் செய்து பின்பு நகராட்சி அலுவலகத்தின் மேற்கண்ட ஒவ்வொரு அறையிலும் சோதனை செய்யப்பட்டு அலுவலகத்திலிருந்த அலுவலர்கள், ஒப்பந்த பணியாளர்கள் உட்பட அனைவரும் திடீர் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையானது 03.07.2026-ஆம் தேதி மாலை 16.00 மணி முதல் இரவு 23.30 மணி வரை நடைபெற்றது. இந்த திடீர் தணிக்கையின் போது திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தின் பொதுப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அங்கு பணியில் இருந்த வருவாய் ஆய்வாளர் திரு.S.ஸ்ரீராம்சுதீர், வருவாய் உதவியாளர்கள் திரு.K.பழனிசாமி, திரு.D.சீனிவாசன், திரு.R.கண்ணன் ஆகியோரை பொறுப்பு மேலாளர் திரு.செந்தில்குமார் முன்னிலையில் தனித்தனியே சோதனை செய்ததில் வருவாய் ஆய்வாளர் திரு.S.ஸ்ரீராம்சுதீர், வருவாய் உதவியாளர் திரு.R.கண்ணன் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த பணம் தலா ரூ.500/- மற்றும் வருவாய் உதவியாளர்கள் திரு.K.பழனிசாமி, திரு.D.சீனிவாசன் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த பணம் தலா ரூ.1,500/- ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தனர். அந்த பணம் குறித்து அவர்களிடம் கேட்ட போது அவர்கள் அதை தங்கள் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தனர். அவர்களது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி தொகைகள் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் பொது சுகாதார பிரிவில் சுகாதார அலுவலர் திரு.P.சோழராஜ் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டு அந்நிகழ்வுகள் செயல்முறை நடவடிக்கையில் குறிக்கப்பட்டது. பின்னர் கணினி வரி வசூல் மையத்திற்கு சென்று அங்கு பணியில்

இருந்த இளநிலை உதவியாளர் (காசாளர் பொறுப்பு) திருமதி.G.சுபலட்சுமி, புள்ளி விவர பணியாளர் திருமதி.R.ரோஜா மற்றும் அப்போது அங்கு ஆஜரில் இருந்த திருச்செங்கோடு பேருந்து நிலையத்தில் செயல்பட்டுவரும் கணினி வரி வசூல் மைய பணியாளரான திருமதி.A.ஜாய்ஸ் மேரி ஆகியோரிடம் அன்றைய கணினி வரி வசூல் விபரம் குறித்து விசாரித்தபோது, அதில் திருமதி.A.ஜாய்ஸ் மேரி அவர்கள் தான் இன்று 120 ரசீதுகள் போட்டு அதன் மூலம் வசூல் செய்த வரிப்பணம் மொத்தம் ரூ.3,64,040/- என்றும் அதற்கான ரசீது பிரதிகள் மற்றும் பணத்தை காசாளர் திருமதி.சுபலட்சுமி அவர்களிடம் ஒப்படைப்பதற்காக தான் கொண்டுவந்திருப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி அவர் வைத்திருந்த பணத்தினை காசாளர் திருமதி.G.சுபலட்சுமி என்பவர் மூலம் வரி வசூல் மையத்தில் இருந்த பணம் எண்ணும் இயந்திரம் மூலம் எண்ணிப்பார்த்து கணக்கிட்டதில், அவர் தெரிவித்த விபரப்படி ரசீதுகள் மற்றும் வரிப்பணம் ரூ.3,64,040/- சரியாக இருந்தது. பின்னர் காசாளர் திருமதி.சுபலட்சுமி அவர்களிடம் விசாரிக்க, அவர் தான் இன்று காலை முதல் அலுவலக நேரம் முடியும் வரை 62 ரசீதுகள் போட்டு அதன் மூலம் வசூல் செய்த வரிப்பணம் ரூ.1,76,541/- என தெரிவித்தார். அதனை ஆய்வுக்குழுவினர் சரிபார்த்தபோது ரசீதுகள் சரியாக இருந்தன. அதற்கான ரொக்க பணத்தை காசாளர் திருமதி.G.சுபலட்சுமி மூலம் வரி வசூல் மையத்தில் இருந்த பணம் எண்ணும் இயந்திரம் மூலம் எண்ணிப்பார்த்து கணக்கிட்டதில், அவர் தெரிவித்த விபரப்படி பணம் இல்லாமல் பணம் ரூ.1,64,250/- மட்டுமே இருந்தது. பணம் ரூ.12,291/- பற்றாக்குறையாக இருந்தது. அதுபற்றி அவரிடம் விசாரிக்க, அவர் தான் வழக்கமாக பொதுமக்களிடம் வரி வசூல் செய்துவிட்டு ரசீதுகளை கொடுத்துவருவதாகவும், ஆனால் அன்று வருவாய் உதவியாளர்கள் திரு.த.கோவிந்தராஜன், திரு.த.சீனிவாசன் ஆகியோர்களிடம் வரி ரசீதுகள் போட்டு வசூலுக்கு கொடுத்து அனுப்பியதாகவும், அவர்கள் அலுவலக நேரம் முடியும் வரை வந்து பணம் கொடுக்காததால் மேற்படி பண இருப்பில் பற்றாக்குறை ரூ.12,291/- உள்ளதாகவும், மேற்படி வருவாய் உதவியாளர்கள் முறையே ரூ.5,707/- மற்றும் ரூ.6,592/- தன்னிடம் வரிப்பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

பின்னர் புள்ளி விவர பணியாளர் திருமதி.R.ரோஜா அவர்களிடம் விசாரிக்க, அவர் தான் அன்று காலை முதல் அலுவலக நேரம் முடியும் வரை 145 ரசீதுகள் போட்டு அதன் மூலம் வசூல் செய்த வரிப்பணம் ரூ.2,57,653/- என தெரிவித்தார். அதனை ஆய்வுக்குழுவினர் சரிபார்த்தபோது ரசீதுகள் சரியாக இருந்தன. அதற்கான ரொக்க பணத்தை காசாளர் திருமதி.G.சுபலட்சுமி மூலம் வரி வசூல் மையத்தில் இருந்த பணம் எண்ணும் இயந்திரம் மூலம் எண்ணிப்பார்த்து கணக்கிட்டதில், அவர் தெரிவித்த விபரப்படி பணம் இல்லாமல் பணம் ரூ.1,85,840/- மட்டுமே இருந்தது. பணம் ரூ.71,813/- பற்றாக்குறையாக இருந்தது. அதுபற்றி அவரிடம் விசாரிக்க, அவர் தான் வழக்கமாக பொதுமக்களிடம் வரி வசூல் செய்துவிட்டு ரசீதுகளை கொடுத்து வருவதாகவும், ஆனால் அன்று வருவாய் உதவியாளர்கள் திரு.கோவிந்தராஜன், திரு.ஆறுமுகம் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.லோகநாதன் ஆகியோர்களிடம் வரி ரசீதுகள் போட்டு வசூலுக்கு கொடுத்து அனுப்பியதாகவும், அவர்கள் அலுவலக நேரம் முடியும் வரை வந்து பணம் கொடுக்காததால் மேற்படி பண இருப்பில் பற்றாக்குறை ரூ.71,813/- உள்ளதாகவும், மேற்படி வருவாய் உதவியாளர்கள் திரு.கோவிந்தராஜன், திரு.ஆறுமுகம் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.லோகநாதன் ஆகியோர் முறையே ரூ.51,908/-, ரூ.17,355/- மற்றும் ரூ.2,550/- தன்னிடம் வரிப்பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார். ஆனால் மேற்படி காசாளர்கள் கூறிய அலுவலர்களில் திரு.த.கோவிந்தராஜன் மற்றும் திரு.லோகநாதன் ஆகிய இருவர் மட்டுமே அலுவலகத்தில் ஆஜரில் இருந்தனர். மேற்படி அலுவலர்கள் திரு.சீனிவாசன் மற்றும் திரு.ஆறுமுகம் ஆகியோர் திடீர் தணிக்கை முடியும் வரை நகராட்சி அலுவலகத்திற்கு வரவில்லை. எனவே அங்கிருந்த இளநிலை உதவியாளர் திரு.லோகநாதன் அவர்களிடம் இதுபற்றி விசாரிக்க, மேற்படி நகராட்சியில் கழிவு நீர் வாகன டிரைவராக பணிபுரியும் திரு.பழனிசாமி என்பவர் கேட்டுக்கொண்டதன்பேரில், கணினி வரி வசூல் மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.ரோஜா அவர்களிடம் சொல்லி வார்டு-27-ஐ சேர்ந்த திருமதி.மேகலா க/பெ.சின்னமுருகன் என்பவரின் சொத்துவரிக்கான ரசீது போடச் சொன்னதாகவும், அதற்கான பணத்தை மேற்படி டிரைவர் திரு.பழனிசாமி அலுவலகம் வந்து கொடுத்துவிடுவதாக தெரிவித்ததாகவும் கூறினார். மேலும் அப்போது பொதுப்பிரிவு

அறையில் இருந்த திரு.த.கோவிந்தராஜன் அவர்களிடம் விசாரிக்க, அவர் தான் அன்று பொதுமக்களிடமிருந்து வரி வசூல் செய்த தொகையினை அலுவலகத்தில் செலுத்துவதற்காக கொண்டுவந்துள்ளதாகவும், ஆய்வுக்குழுவினர் வரி வசூல் மையத்தில் விசாரணை செய்து கொண்டிருந்ததால், தான் பொதுப்பிரிவு அறைக்கு வந்து அமர்ந்து கொண்டதாகவும் தெரிவித்து, தனது வலது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 103 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் நோட்டுக்கள் 3 எண்ணிக்கையிலும், 10 ரூபாய் நோட்டு ஒன்றும் என மொத்தம் ரூ.52,110/- இருந்தது. மேலும் அவர், தான் பகல் சுமார் 02.00 மணியளவில் வரி வசூல் மையத்தில் இருந்து வரி ரசீதுகளை பெற்று சென்றதாகவும், அதற்கான மேற்படி வரி வசூல் தொகையினை அலுவலகத்தில் செலுத்துவதற்கு எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். இவ்வாறு முன்கூட்டியே வரி செலுத்தியதாக ரசீது தயார் செய்து பின்னிட்டு வரிப்பணம் வசூலிக்கும் நடைமுறை நகராட்சியில் உள்ளதா என நகராட்சி ஆணையர் அவர்களை அலைபேசி மூலம் தொடர்புகொண்டு கேட்டபோது, அவ்வாறு நடைமுறை ஏதும் இல்லை என்றும், வரி வசூல் மையத்தில் பணத்தை வசூல் செய்த பிறகே ரசீது வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், திரு.த.கோவிந்தராஜன் வரி வசூல் மையத்தில் செலுத்த வேண்டிய தொகை என காசாளர்கள் இருவரும் தெரிவித்த தொகையானது ரூ.57,615/- (ரூ.51,908 + 5,707 = 57,615) ஆகும். ஆனால் திரு.த.கோவிந்தராஜன் வசம் ரூ.52,110/- மட்டுமே இருந்தது. மேலும், அவரிடம் சொந்த பணம் ஏதாவது வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது, தான் ஆஜர்படுத்திய தொகையில் ரூ.210/- மட்டும் தனது சொந்தபணம் என்று தெரிவித்தார். அதனால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் கூறிய விளக்கங்கள் பொருத்தமாக இல்லாததாலும், சட்ட விதிமுறைகளுக்கு முரண்பட்டதாக இருந்ததாலும் மேற்படி தொகை ரூ.51,900/- பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்த காரணத்தினால் அப்பணம் ரூ.51,900/-த்தை கணக்கில் வராத பணமாக கருதி செயல்முறை நடவடிக்கைகள் மூலம் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், காசாளர்கள் திருமதி.G.சுபலட்சுமி, திருமதி.R.ரோஜா ஆகியோர் அலுவலக பணிநேரம் முடிந்த

பின்னரும் அரசுக் கணக்கில் வசூல் செய்யப்பட்ட ரொக்கத்தை சரியாக கணக்கில் காட்டாமல் இருவரும் முறையே ரூ.71,813/- மற்றும் ரூ.12,291/- என மொத்தம் ரூ.84,104/- தொகை அரசுக் கணக்கில் பற்றாக்குறையாக காண்பித்ததால் மேற்படி அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட அரசு பணத்தை அவர்கள் முறைகேடாக கையாடல் செய்திருக்கக் கூடும் என சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்தது. பின்பு பொதுப்பிரிவில் இருந்த வருவாய் ஆய்வாளர் திரு.S.ஸ்ரீராம்சுதிர் அவர்களிடம் வருவாய் பிரிவின் பொறுப்பு அலுவலர் யார் என்று விசாரித்தபோது, வருவாய் அலுவலர் தான் அந்த பிரிவின் பொறுப்பு அலுவலர் என்றும், ஆனால் அங்கு வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.கே.பழனியப்பன் என்பவர் கடந்த 30.06.2026 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், இதுவரை அவரது இருக்கை பொறுப்பை யாரிடமும் ஒப்படைக்க உத்தரவு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். அதுபற்றி அங்கிருந்த பொறுப்பு மேலாளர் திரு.M.செந்தில்குமார் அவர்களிடம் விசாரித்தபோது, இளநிலை உதவியாளர் திரு.பழனிசாமி என்பவர் இதற்கான குறிப்புக்கோப்பு தயார் செய்துள்ளதாக தெரிவித்தார். எனவே வருவாய் ஆய்வாளர் திரு.S.ஸ்ரீராம் சுதிர் மற்றும் பொறுப்பு மேலாளர் திரு.M.செந்தில்குமார் ஆகியோருடன் வருவாய் பிரிவு அலுவலகத்தை சோதனை செய்த போது, அங்கு அலுவல் சம்மந்தமான கோப்புகள் மற்றும் பதிவேடுகள், ரசீதுகள் ஆகியவை இருந்தது. பின்னர் வருவாய் அலுவலர் இருக்கையின் பின்புறம் இருந்த ஒரு இரும்பு பீரோவை சோதனையிட்டதில், அதில் சில பதிவேடுகள் மற்றும் ரசீது புத்தகங்கள் இருந்தது. அந்த பீரோவின் அடிப்பக்கத்தில் செல்போன் டார்ச்லைட் உதவியுடன் பார்வையிட்டதில், அங்கு சில வேஸ்ட் பேப்பர்களுக்கிடையே 2 கத்தைகளாக 500 ரூபாய் நோட்டுகள் பணம் கேட்பாரற்று கிடந்தது. அவற்றை வருவாய் ஆய்வாளர் திரு.ஸ்ரீராம் சுதிர் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்கையில், அதில் ஒரு கத்தையில் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணிக்கையில் ரூ.10,000/- மற்றும் மற்றொரு கத்தையில் 500 நோட்டுக்கள் 36 எண்ணிக்கையில் ரூ.18,000/- என மொத்தம் ரூ.28,000/- இருந்தது. எனவே அந்த பணத்திற்கு யாரேனும் உரிமை கோருகிறீர்களா? என அங்கிருந்த அனைத்து பணியாளர்களையும் அழைத்து கேட்டபோது, அங்கிருந்த எவரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. எனவே அப்பணம் உரிமை கோரப்படாத பணமாக கருதப்பட்டு ரூ.28,000/- பணம்

விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. எனவே, திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது, காசாளர் திருமதி.G.சுபலட்சுமி, புள்ளி விவர பணியாளர் திருமதி.R.ரோஜா ஆகியோர் அலுவலக பணிநேரம் முடிந்த பின்னரும் அரசுக் கணக்கில் வசூல் செய்யப்பட்ட ரொக்கத்தை சரியாக கணக்கில் காட்டாமல் இருவரும் முறையே ரூ.71,813/- மற்றும் ரூ.12,291/- என மொத்தம் ரூ.84,104/- தொகை அரசுக் கணக்கில் பற்றாக்குறை காண்பித்ததால் மேற்படி அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட அரசு பணத்தை அவர்கள் முறைகேடாக கையாடல் செய்தமைக்கான நம்பத்தகுந்த காரணம் இருப்பதாலும், வருவாய் உதவியாளர் திரு.த.கோவிந்தராஜன் என்பவர் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக தனது கடமையை செய்வதற்காக முறையற்ற ஆதாயம் பெறும் வகையில் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்ற கணக்கில் வராத பணம் ரூ.51,900/- வைத்திருப்பதற்கான நம்பத்தகுந்த காரணம் இருப்பதாலும், மேற்படி அலுவலர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.51,900/- மற்றும் எவராலும் உரிமை கோரப்படாமல் கேட்பாரற்று அலுவலகத்தின் வருவாய் பிரிவில் கிடந்த பணம் ரூ.28,000/- என ஆக மொத்தம் ரூ.79,900/- மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் மேற்படி அலுவலர்கள் திருமதி.G.சுபலட்சுமி, திருமதி.R.ரோஜா, திரு.த.கோவிந்தராஜன், திரு.S.ஸ்ரீராம்சுதிர் மற்றும் திரு.P.சோழராஜ் ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம்(xxxxx) 4.7.2026. (R. ரகுநாதன்)

Sir,

I received a computer type written complaint from Tr.R.Ragunathan, Inspection Cell Officer / Deputy Collector, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts, Collectorate, Salem on 04.07.2026 at 14.45 hrs and after getting concurrence from DVAC, Chennai and I registered a case in Namakkal

Vigilance and Anti-Corruption Crime No.07/AC/2026, u/s. 7(a), 13(1) (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 and 106(1) BNSS on 04.07.2026 at 15.15 hrs against the accused 1) Tmt.G.Subalakshmi, Junior Assistant / Cashier (i/c), Tiruchengode Municipality, 2) Tmt.R.Roja, Data Entry Operator, Tiruchengode Municipality and 3) Tr.D.Govindarajan, Revenue Assistant, Tiruchengode Municipality, Namakkal District. Sd/-(xxxxx) (S.Prabhu) 04/07/26. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer type written complaint of Tr.R.Ragunathan are submitted to the Hon'ble Court of Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned.

04/07/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.